செய்தி வெளியீடு எண்: 556 நாள்: 05.07.2010

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

பெட்ரோலிய பொருட்களின் விலை உயர்வை கண்டித்தும் அதனை திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தியும் இன்று 5.7.2010 திங்கட் கிழமை காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை பொது வேலை நிறுத்தத்திற்கு சில அரசியல் கட்சிகள் அழைப்பு விடுத்திருந்தன.

இந்த பொது வேலை நிறுத்தத்தின்போது, எந்தவிதமான வன்முறையும் மற்றும் அசம்பாவிதமும் ஏற்படாமல் சட்டம் மற்றும் ஒழுங்கு பராமரிக்கப்பட்டது. மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களான பால், குடிநீர், மின்சாரம், மருத்துவ வசதி, ஆகியவை தங்கு தடையின்றி வழங்கப்பட்டன. பெட்ரோல் விற்பனை நிலையங்கள் வழக்கம்போல் செயல்பட்டன.

தலைமைச் செயலகத்தில் 99% விழுக்காடு பணியாளர்கள் பணிக்கு வந்திருந்தனர். மாநிலத்திலுள்ள இதர மத்திய மாநில அரசு அலுவலகங்கள், மற்றும் வங்கிகள் வழக்கம் போல் இயங்கின. மின் நிலையங்கள், துணை மின் நிலையங்கள், அரசு கட்டடங்கள், தகவல் தொடர்பு நிலையங்கள், பாலங்கள், எண்ணெய் கிடங்குகள் மற்றும் இரயில்வே மேம்பாலங்கள் ஆகியவற்றிக்கு போதிய பாதுகாப்பு அளிக்கப்பட்டது. அரசுப் பேருந்துகள் சென்னை மாநகரத்திலும் இதர மாவட்டங்களிலும் முழுமையாக இயங்கின. தனியார் பேருந்துகள், சீருந்துகள், ஆட்டோக்கள், இரு சக்கர வாகனங்கள் பொதுவாக எவ்வித தடையுமின்றி இயங்கின. ஆங்காங்கே கல்வீச்சு சம்பவங்களால் பேருந்துகளின் கண்ணாடிகள் சேதமடைந்தாலும், அரசு பேருந்துகள் வழக்கம் போல் இயங்கின.

மாநிலத்தில் சில மாவட்டங்களில் ஆங்காங்கே கடைகள், தொழிற் கூடங்கள் மூடப்பட்டிருந்தாலும், பெருவாரியான வணிக நிறுவனங்கள், தொழிற் சாலைகள் மற்றும் உற்பத்திக் கூடங்கள் வழக்கம் போல் இயங்கின.

மாநிலத்தில் சில இடங்களில் இரயில் மறியல், பேருந்து மறியல், சாலை மறியல் மற்றும் ஆர்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சினை ஏற்படாமலும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு இல்லாமலும் நடவடிக்கைகள் உரிய நேரத்தில் எடுக்கப்பட்டன.

பெருவாரியான மக்களுக்குப் பயன்படும் வணிக வளாகங்கள், உணவகங்கள், தேநீர் கடைகள், பெட்டிக் கடைகள் தடையின்றி செயல்பட்டன.

இன்று அறிவிக்கப்பட்ட வேலை நிறுத்தத்தினால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படவில்லை.

தலைமைச் செயலாளருக்காக

வெளியீடு: இயக்குநர்,செய்தி மக்கள் தொடர்புத்துறை,

தலைமைச் செயலகம்,சென்னை – 9.